**வட மாகாண வீதி புனரமைப்பு செயற்திட்டம் (ஒட்டிசுட்டான் – நெடுங்கேணி வீதி மற்றும் முல்லைத்தீவு – புளியங்குளம் வீதியின் புனரமைப்பு) - 2014**

---

வட மாகாண தேசிய வீதி புனரமைப்பு செயற்திட்டத்தின் (ஒட்டிசுட்டான் –நெடுங்கேணி வீதி மற்றும் முல்லைத்தீவு– புளியங்குளம் வீதியின் புனரமைப்பு) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 செப்தெமபர் 09 ஆந் திகதிய பீஎல்ஏ- 201006 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின்படி இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல் நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. ஒட்டிசுட்டான் – நெடுங்கேணி வீதி மற்றும் முல்லைத்தீவு–புளியங்குளம் வீதியில் 52.6 கிமீ நீள வீதியை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ஐ.அ.டொலர் 50.01 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 42.51 மில்லியன் அல்லது 85 சதவீதம் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2010 திசெம்பர் 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2014 பெப்ரவரி 14 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. நிர்மாண வேலைகள் 2014 யூன் 27 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் புனரமைக்கப்பட்ட வீதிப் புனரமைப்புகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேந்தலைக் கிரய அறவீடாக ரூபா 635,169 தொகை அனுப்பப்பட்டிருந்தது. மேலும், ரூபா 87,841 ஆன மிகையூதியம் மற்றும் மருத்துவப் படிகள் சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் 8.6 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதியில்லாமல் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அத்தகைய நடைமுறை உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் போதும் தொடர்ந்திருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போதான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2014 ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தியவை | |
| | ஐ.அ.டொலர் மிலலியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மிலலியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மிலலியன் | ரூபா மில்லியன் |
| சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 42.51 | 5,082.69 | 10.47 | 1,370.41 | 42.51 | 5,323.99 |
| இலங்கை அரசாங்கம் | 7.50 | 1,048.19 | 0.15 | 19.73 | 7.52 | 980.39 |
| | 50.01 | 6,130.88 | 10.62 | 1,390.14 | 50.03 | 6,304.38 |

### 3.2. பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2011 ஆகஸ்ட் 15 இல் தொடங்கப்பட்ட ஒட்டிசுட்டான் – நெடுங்கேணி வீதி மற்றும் முல்லைத்தீவு–புளியங்குளம் வீதியின் 52.6 கிமீ நீள வீதி புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2013 யூன் 27 இல் இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒட்டிசுட்டான் – நெடுங்கேணி வீதியின் 39 மதகுகளின் புனர்நிர்மாண வேலைகள் செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் 156 பாதுகாப்புக் கற்கள் 2014 திசெம்பர் 31 வரையும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 14.9 ஆம் உட்பிரிவின் பிரகாரம், குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி காலாவதியான பின்னர் ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவிற்காக பிடிகாசு சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2014 யூன் 27 இல் ஒப்பந்தத்தின் குறைபாட்டு பொறுப்புக் காலத்தின் பூர்த்தியாக்கலின் முன்னர், ரூபா 143.53 மில்லியன் தொகையான பிடிகாசின் பகுதி வங்கி உத்தரவாதமொன்றினை ஏற்றுக்கொள்வதன் மூலம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கைகளில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்திட்ட நிதிகளில் ஒப்பந்தகாரர் அல்லது ஆலோசனையாளரால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்திய சொத்துக்கள் செயற்திட்டத்தின் சொத்துக்களாக கருதப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதி புறம்பாக பதியப்பட்டு செயற்திட்டத்தின் பதிவேடுகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெள்ளத்தால் சேதமடைந்திமை காரணமாக கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை- புல்மோட்டை வீதியின் 5.5 கிலோமீற்றர் மற்றும் பராக்கிராபுர-பதவிய வீதியின் 9.3 கிலோமீற்றர் வீதியின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் முறையே ரூபா 71 மில்லியன் மற்றும் ரூபா 289 மில்லியன் தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், புதுக்குடியிருப்பு மீள்குடியேற்ற பகுதிகளிலுள்ள ஏனைய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ரூபா 581 மில்லியன் கிரயத்தில் புனரமைக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட வேலைகள் செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 52.6 கிலோ மீற்றர் நீளமான ஒட்டிசுட்டான்- நெடுங்கேணி வீதி மற்றும் முல்லைத்தீவு – புளியங்குளம் வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான அளவீட்டுப் பட்டியலின் 04 விடயங்களின் கீழ் ரூபா 2,517.25 மில்லியன் தொனை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 பெப்ரவரி 13 வரை சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் பிரகாரம், அவற்றில் ரூபா 734.81 மில்லியன் மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. அளவீட்டுப் பட்டியல் நெகிழ்ச்சியுடையதாக தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மேலதிகமாக குறிப்பிடப்பட்ட அளவீட்டுப் பட்யலின் அடிப்படையில் தொழிலாரம்பிப்பு முற்பணத்தில் மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2014 யூன் 27 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 4.49 மில்லியன் விசேட கடனொன்றை பெற்றிருந்தது.